ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 14,923/2—1970 සැප්තැම්බර් 14 වැනි සඳුද — 1970.9.14

14,923/2 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது.)

# பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

ச வ. பீ. 42/57.

ம. தே. அ. எண் : எக்ஸ். 37/66.

### மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

#### கட்டளை

1959 ன் 12 ம் இலக்கச் சட்டம், 1968 ன் 42 ம் இலக்கச் சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்டுள்ளவாறான (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 277 ம் பிரிவின் 2 (அ) ம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு மகாதேசாதிபதி, விலியம் கொபல்லவ ஆகிய நான், கண்டி மாநகர சபை சம்பந்தமாக விசேட ஆணையாளர்களை நியமனஞ் செய்தல் தொடர்பிலானதும் 1970 செத்தெம்பர் 5 ந் திகதிய 14,922/1 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டதுமான கட்டளையை, " உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. லேக்கம்வச கொட்வின் சிரிவர்தன, கண்டி சிறுநிலக் கமக்காரர் ஆணைக் குழுவின் ஆணையாளர் திரு. முத்துபண்டார சமரக்கோன் ஆகியோரை விசேட ஆணையாளர்களாக " என்னும் சொற்களுக்குப் பதிலாக " கண்டி சிறுநிலக் கமக்காரர் புனர் வாழ்வுப் பகுதியின் ஆணையாளர் திரு. முத்துபண்டார சமரக்கோன் அவர்களை விசேட ஆணையாளராக " என்னும் சொற்களைப் பிரதியீடு செய்வதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகிறேன்.

கொழும்பு 7,
13, செத்தெம்பர் 1970.

டபிள்யூ. கொபல்லவ,
மகாதேசாதிபதி.

9–846.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.